**சுருக்கம்**

செய்தி மக்கள் தொடர்புத் துறை — புதிய பகுதி 2 திட்டம் - 2003 — 2004 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் — திட்டச் செலவினத்திற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**செய்தி மற்றும் சுற்றுலா (நிர்.4)த் துறை**

அரசாணை (நிலை) எண் 110
நாள் : 13.6.03

ஆணை :

2003 — 2004ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் புதிய திட்டச் செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிதியொதுக்கமும் செய்யப் பட்டுள்ளது. செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கான கீழ்க்காணும் புதிய திட்டங்களின் மொத்த செலவினமான ரூ.32.90 இலட்சம் (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) அரசு அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தலைமையிடத்தில், செய்தி வெளியீட்டுப் பிரிவில், குளிர்சாதன வசதியுடன் கணினி, அதி திறன் கொண்ட ஒளிநகல் இயந்திரம் அமைத்தல். | 4.70 |
| 2 | தலைமையிடத்தில் மேற்கொள் பிரிவில் கணினி, உபகரணங்கள் மற்றும் நிகரி வாங்குதல் | 1.50 |
| 3 | 3 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள், ஆறு செய்தி நிலையங்கள் மற்றும் தலைமையிடம் ஆகியவற்றிற்கு 10 வி.சி.டி. கருவிகள் வாங்குதல் | 0.70 |
| 4 | தலைமையிடத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவில் இணைய வலைதள (Web streaming) ஒளிபரப்பு மேடை அமைத்தல் | 25.00 |
| 5 | மின்னணு ஆவணக் காப்பக முறையை செய்தி வெளியீட்டுப் பிரிவு மற்றும் மேற்கோள் பிரிவுகளுக்காக அமைக்க | 1.00 |

| | | |
|---|---|---|
| | திட்ட விபரம் தயாரிக்கவும், கலந்தறி (Consultancy Service) கட்டணத்திற்காகவும் முதற் கட்டமாக. | |
| | **மொத்தம்**<br><br>(ரூபாய் முப்பத்திரெண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) | 32.90 |

2. மேலே பத்தி 1-ல் வரிசை எண் 1,2,3,4,5,-ல் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கான செலவினங்களை நடப்பிலுள்ள அரசு விதிகளின்படி ஒப்பந்த புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்வதற்கு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3. மேலே பத்தி 1-ல் வரிசை எண் 1,2,3,4,5-ல் உள்ள செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.
2220 – செய்தி விளம்பரம் - 60. ஏனையவை – 106 - நேரிட விளம்பரம் - 10 ஆம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் - JA ஒருங்கிணைந்த நேரிட விளம்பரத் திட்டம் - 19 இயந்திரமும், சாதனமும் - 01. வாங்குதல்
(த.தொ.கு.எண்.2220 60 106 JA 1906)

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பாணை எண் 34954 / நிதி (செய்தி மற்றும் சுற்றுலா)/03, நாள் 10.6.03ன் படி ஒத்திசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.ராமதாஸ்
அரசுச் செயலர்

பெறுநர்

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
மாநில முதன்மை கணக்காயர், சென்னை – 18
மாநில முதன்மை கணக்காயர், சென்னை – 6
மாநில கணக்காயர், சென்னை – 9
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு-செலவு)த் துறை, சென்னை – 9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9
கணக்கு அலுவலர் (செய்தி), செய்தி மற்றும் சுற்றுலா (கணக்கு)த் துறை, சென்னை – 9

நகல் :

நிதி (வ.செ.)த்துறை, சென்னை — 9
உதிரிகள்

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்